<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 52/2022** நாள்: **31.10.2025** ம.சா.**2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணராஜ் | தொழில் | : | மருத்துவர் |
| த/பெ | : | சிவகுருநாதன் | கிராமம் | : | கோயம்புத்தூர் |
| வயது | : | 59 | தாலுகா | : | கோயம்புத்தூர் |
| | | | மாவட்டம் | : | கோயம்புத்தூர் |

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>

<u>முதல் விசாரணை -</u>

நான் தற்போது கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனையில் உதவி இருப்பிட மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.02.2020 ல் மாலை 7 மணியளவில் மோகன்ராஜ், த/பெ.பெரியசாமி, உடுமலைபேட்டை, என்பவர் 10.02.2020 அன்று சாலை விபத்து ஏற்பட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் முதலில் சேர்ந்ததாகவும், பின்னிட்டு கோவை ரெக்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதகாவும், பிறகு நான் பணிபுரியும் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். எலும்பு முறிவுகளுக்கு மேற்படி மோகன்ராஜிக்கு கோவை ரெக்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. வயிற்றில் வீக்கம் இருப்பதாகவும், வலி இருப்பதாகவும், மேல் சிகிச்சைக்கு எங்கள் கோவை ரெக்ஸ் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவரை பரிசோதித்ததில் அவரின் சிறுகுடலின் மேற்பகுதியில் ஒரு துவாரம் காணப்பட்டது. அதற்கு எங்கள் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்தார்கள். 01.03.2020 வரை தொடர் சிகிச்சையில் எங்கள் மருத்துவமனையில் இருந்தார். பின்பு மருத்துவமனையினுடைய அறிவுறுத்தலுக்கு எதிராக அவர் சொந்த விருப்பத்தில் 01.03.2020 ல்

சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார். ம.சா.ஆ.2 ஆவணமானது எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரியாகும். ம.சா.ஆ.5 ஆவணமானது எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட பில்கள் ஆகும். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஆவணமானது மேற்படி மோகன்ராஜின் உடற்கூராய்வு அறிக்கை, அதில் மோகன்ராஜிக்கு வயிற்றில் அடிப்பட்ட காயத்தின் பின்விளைவினால் இறந்துள்ளதாக கருத்துரை வழங்கியுள்ளார்கள்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

இறந்துபோனவர் எங்கள் மருத்துவமனையிலிருந்து அவருக்கு ஏற்பட்ட வயிற்று காயத்திலிருந்து பூரண குணமாகி தான் விடுவிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற காரணத்தினால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.31 14:25:50 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.